# முசலி பிரதேச சபை
# மன்னார் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 மே 09 ஆந் திகதியே கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 யூலை 02 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட உயர் தகவல்களுக்கும் விளக்கங்களுக்கும் அமைய முசலி பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கு உரிய கணக்குப் புத்தகங்களைப் பராமரித்து வந்திருந்தது என்றும், இவ்வறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காட்டப்பட்டவாறான விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர 2010 திசெம்பர் 31 இல் உள்ளபடி முசலி பிரதேச சபையின் நிலைவரம் மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் செயற்பாடுகளிலிருந்தான நிதிசார் விளைவு என்பவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு அமைவாக நிதிசார் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்றும், நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில் பின்பற்றிய கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களுடன் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வடக்கு கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்படுத்தல் செயற்திட்டச் (நெல்சிப்) செலவினமான ரூபா 107,066 தொகை மீளாய்வாண்டிற்கான சபையின் செலவினமாக

கருதப்பட்டிருந்தமை காரணமாக இத்தொகையால் செலவினம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

### 1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

**கணக்காய்விற்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை**

தேவையான தகவல்கள் இன்மை காரணமாக மொத்தம் ரூபா 7,092,970 ஆன கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியவில்லை.

### 1.3.4 இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள். விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இனங்கி ஒழுகாமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டம்<br>132 ஆம் பிரிவு | ஆண்டொன்றில் ரூபா 1,000 இற்கு மேல் மத ரீதியான மற்றும் பொது வேலைகளிற்காக செலவிடுகையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் முன் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், அங்கீகாரத்தினைப் பெற்றுக்கொள்ளாது ரூபா 172,689 ஆனதோர் தொகை உபசாரச் செலவினத்திற்காக செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஆ) | பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாக) ஒழுங்குவிதிகள் - 1988<br>V ஆம் அத்தியாயத்தின் 140 ஆம் பிரிவு | முற்பணத் தொகையான ரூபா 270,554 இனை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | 437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சுற்றறிக்கை அறிவுறுத்தல்களிற்கு முரணாக தனியார் காப்புறுதிக் கம்பனியொன்றிடமிருந்து ஐந்து வாகனங்களிற்காக ரூபா 6,251 காப்புறுதி பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது |

**(ஈ)** அரசாங்க தாபன விதிக்கோவை

| | |
|---|---|
| VII ஆம் அத்தியாயத்தின் 12:3 ஆம் பிரிவு | தாபன விதிக்கோவையின் அறிவுறுத்தல்களிற்கு முரணாக செயலாளரிற்கு பதிற்கடமை சம்பளம் செலுத்தப்பட்டிருந்தது. அதன் விளைவாக ரூபா 68,805 மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தது. |

## 2. நிதிசார் மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 1,904,030 ஆக இருந்ததுடன் நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டெழும் செலவினத்திற்கு மேலான வருமான மிகை ரூபா 738,171 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம்

செயலாளரினால் மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் என்பவை பற்றிய நிலைமைகள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|
| | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை | பாதிடப்பட்டவை | உள்ளபடியானவை | 31 திசெம்பரில் திரண்ட நிலுவை |
| | ரூபா ‘000’ | ரூபா ‘000’ | ரூபா ‘000’ | ரூபா ‘000’ | ரூபா ‘000’ | ரூபா ‘000’ |
| வீதவரி | - | 02 | - | - | - | - |
| வாடகை | 60 | 228 | - | - | 02 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 30 | 66 | - | - | 14 | - |
| ஏனைய வருமானங்கள் | 6,047 | 9,010 | - | 378 | 416 | - |

### 2.2.2 முத்திரைக் கட்டணங்கள்

பெறப்பட வேண்டிய முத்திரைக் கட்டணங்களை கணிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 செலவுக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமாக சபையின் பாதீடு செய்யப்பட்ட மற்றும் உள்ளபடியான செலவுகள் முரண்களுடன் கீழே தரப்பட்டுள்ளன.

| மீண்டெழும் செலவினம் | 2010 பாதீடு செய்யப்பட்டவை | 2010 உள்ள படியானவை | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்ட்டவை | 2009 உள்ள படியானவை | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' | ரூபா '000' |
| ஆளுக்குரிய வேதனம் | 4,505 | 5,035 | (530) | 5,143 | 4,511 | 632 |
| ஏனையவைகள் | 1,627 | 2,590 | (963) | 278 | 1,360 | (1,082) |
| உப மொத்தம் | 6,132 | 7,625 | (1,493) | 5,421 | 5,871 | (450) |
| **மூலதனச் செலவு** | 200 | 2,025 | (1,825) | -- | 794 | (794) |
| முழு மொத்தம் | 6,332 | 9,650 | (3,318) | 5,421 | 6,665 | (1,244) |

### 2.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளபடியான பதவியணி**

2010 திசெம்பர் 31 இல் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியினர் எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியினர் எண்ணிக்கையும் பற்றிய தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| பதவி வகை | அங்கீகரிக்கப்பட்டவை | உள்ளபடியானவை |
|---|---|---|
| பதவியணித் தரம | 02 | 01 |
| இரண்டாம் மட்டம் | 08 | 05 |
| ஆரம்ப மட்டம் | 15 | 11 |
| ஏனையவர்கள் (சமயாசமயம்/தற்காலிகம்) | - | 05 |
| மொத்தம் | 25 | 22 |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 2.5.1 பெறவேண்டிய கணக்குகள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 697,424 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடத்திற்கும் மேலாக பெறவேண்டியிருந்த தொகை ரூபா 270,554 ஆகும்.

### 2.5.2 அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன்கள்

2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதிகளின் மொத்தம் ரூபா 1,361,661 ஆக இருந்ததுடன் அதில் ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்படாதிருந்த தொகை ரூபா 115,128 ஆகும்.

### 2.5.3 மெய்மையாய்வு செய்யப்படாத சொத்துக்கள்

பௌதீகப் மெய்மையாய்வுச் சபை அறிக்கையினால் உறுதிப்படுத்த ப்படாது 2010 திசெம்பர் 31 இல் காணப்பட்ட புத்தகப் பெறுமதியின் அடிப்படையில் கணிப்பிடப்பட்டிருந்த சொத்துக்களின் பெறுமதி ரூபா. 18,069,371 ஆகும்.

### 2.5.4 போதிய அதிகாரத்தால் ஆதாரப்படுத்தப்படாத கொடுக்கல்வாங்கல்கள்

போதிய அதிகாரமின்றி பின்வரும் செலவினம் சபை நிதியத்திலிருந்து மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(அ) கண்காட்சிக்காக ரூபா 7,225 தொகையான மீன்பிடி விடயங்களை கொள்வனவு செய்தல்

(ஆ) அணர்த்த நிவாரணத்திற்காக ரூபா 25,000 தொகையினை செலுத்தியமை

## 2.6 செயலாற்றுகை

ஆண்டின் தொடக்கத்தில் பிரதேச சபையினால் செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக ஆண்டில் அடைய எதிர்பார்த்த நோக்கங்களையும் அதன் செயன்முன்னேற்றத்தையும் மதிப்பிட முடியாதுள்ளது.

## 2.7 உள்ளகக் கணக்காய்வு

பிரதேச சபையில் போதிய அளவில் உள்ளகக் கணக்காய்வு இடம் பெற்றிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிர்வாகம்

(ஈ) வாகனங்களின் பாவனை

(உ) சொத்துக்கள் முகாமைத்துவம்